IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.100/2018
DEPOSITION OF WITNESS (DW2)

பி.வா.சா.2 சாட்சி சுந்தரம்     த.பெ. செல்லம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 03.10.2024 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. மதுரை மாவட்ட நூற்பு நெசவு தொழிலாளர் சங்கத்தில் எத்தனை ஆண்டுகளாக செயலாளராக இருக்கிறேன் என்றால் 2003-ல் இருந்து தற்போது வரை இருக்கிறேன். எனது வயது 74 ஆகும். மேற்படி சங்கத்தில் நூற்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர் மட்டும் தான் உறுப்பினராக சேர முடியும் என்றால் சரியல்ல. நான் மேற்படி சங்கத்தில் எந்த வருடம் உறுப்பினராக சேர்ந்தேன் என்றால் 1969ல் சேர்ந்தேன்.

2. 1969ல் எனக்கு எத்தனை வயது என்றால் சுமார் 24 இருக்கும். நான் எந்த மில்லில் வேலை பார்த்தேன் என்றால் 1969-ல் சீதாலட்சுமி மில்லில் வேலை பார்த்தேன். மேற்படி மில் தொடங்கப்பட்ட காலத்திலேயே மேற்படி சங்கமும் தொடங்கப்பட்டது என்றால் சரியல்ல, மதுரை ஜில்லா மில்தொழிலாளர்கள் சங்கம் என்றுதான் இருந்தது. மேற்படி சங்கம் தொடங்கப்பட்ட காலத்தில் பிரதிவாதி இராமச்சந்திரன் செயலாளராக இருந்தார் என்றால் சரிதான்.

3. தாவாச் சொத்து 9.9.1981ல் அதன் கிளைச்சங்கத்தின் பெயரில் செயலாளர் மற்றும் தலைவரால் கிரையம் பெறப்பட்டது என்றால் பிரதிவாதி இராமச்சந்திரன் பெயரிலும், அவர் சார்ந்த மதுரை ஜில்லா மில்தொழிலாளர்

சங்கத்தின் பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி கிரையப்பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி சொத்து யாரிடமிருந்து கிரயம் வாங்கப்பட்டது என்பது தெரியுமா என்றால் பெயர் நினைவில்லை. எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. வழக்குச் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பான பேச்சு வார்த்தைக்கு நான் சென்றேனா என்றால் இல்லை.

4. மேற்படி 9.9.1981ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தில் சாட்சியாகவோ, அறிவேன் சாட்சியாகவோ நான் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து கிரையம் வாங்கும்போது காலியிடமாக இருந்ததா என்றால் ஓட்டுக்கட்டிடமாக இருந்தது. கிரையப்பத்திரத்தில் தாவாச் சொத்து மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்திற்கு தனக்கன்குளம் சீதாலட்சுமி மில் கிளை தொழில்சங்கத்திற்காக கிரையம் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நான் எனது முதல் விசாரணையில் இராமச்சந்திரன் தனது சொந்த பணத்தில் வழக்குச் சொத்தை கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் இராமச்சந்திரன் சொந்த பணத்தில் கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் கண்ட 5 சென்டை கிளைச்சங்கத்திற்காக வாங்கப்பட்டு கிளைச்சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சங்கத்தின் அனுபவத்திற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6. நான் பிரதிவாதிக்கு வேண்டிய நபர் என்பதால் அவரின் சொந்த பணத்தில் தாவாச் சொத்து வாங்கியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் தாவாச் சொத்தில் மதுரை ஜில்லா நெசவாளர் சங்கத்தின் சீதாலட்சுமி மில் கிளைச்சங்கம் 1981 முதல் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

7. எனது நிரூபணவாக்குமூலத்தில் வழக்குச் சொத்தை இராமச்சந்திரன் தனது சொந்த சொத்தாக அனுபவம் செய்து வருவதாக கூறவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் மதுரை மாவட்ட நூற்பு நெசவு தொழிலாளர் சங்கத்திற்கும், பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். தாவா சொத்து எனது வாக்குமூலத்தின்படி வாதியின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு வேண்டிய நபர் என்பதால் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.